

அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (23.04.2025) சென்னை, கிண்டி, தேசிய முதியோர் நல மருத்துவமனையில் இந்தியாவில் உள்ள 17 மாநிலங்களிலிருந்து பயிற்சி பெறுவதற்காக வருகை தந்துள்ள 41 மருத்துவர்களுக்கு பயிற்சி கையேட்டினை வெளியிட்டார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், சென்னை, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக துணைவேந்தர் மரு.கி.நாராயணசாமி, சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, தேசிய முதியோர் நல மருத்துவமனை இயக்குநர் மரு.தீபா மற்றும் மருத்துவ பேராசிரியர்கள், மருத்துவ அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (23.04.2025) சென்னை, கோடம்பாக்கம், புலியூர், பாரத்வாஜேசுவரர் திருக்கோயிலுக்கு உபயதாரர் நிதியில் ரூ.1.15 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ள வெள்ளித் தகடு போர்த்தப்பட்ட புதிய அதிகார நந்தியினை திருக்கோயில் பயன்பாட்டிற்கு வழங்கினார். உடன் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா.எழிலன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, இணை ஆணையர்கள் திருமதி கோ.செ.மங்கையர்கரசி, திருமதி இரா.வான்மதி, திருமதி ஜ.முல்லை, மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன் மோகன், துணை ஆணையர்கள் இரா.ஹரிஹரன், திருமதி ஜெயா, மாநகராட்சி உறுப்பினர் திருமதி எளிசபெத் அகஸ்டியன், உபயதாரர் ஈ.டி. சுந்தரமூர்த்தி குடும்பத்தினர் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! கா. ராஜ்முகமது தலைமை!

# சென்னை கிழக்கு மாவட்ட, தி.மு.க. நெசவாளர் அணி சார்பில், மாபெரும் பொதுக்கூட்டம்!

### நாஞ்சில் சம்பத், விடுதலை ராஜேந்திரன், முனைவர் ஆதிரா முல்லை குமரி பிரபாகரன் சிறப்புரை!

சென்னை,ஏப்.24-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக நெசவாளர் அணி சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் - 62, சுயமரியாதை தமிழ் அறம்! சூரியனுக்கு ஏன் விளம்பரம்!! எனும் தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் 23.04.2025 புதன்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, புளியந்தோப்பு நெடுஞ்சாலை, பார்த்தசாரதி தெரு அருகில் நடைபெற்றது.



இப்புகழரங்கத்தில் மாவட்ட அமைப்பாளர் - சென்னை கிழக்கு மாவட்ட திமுக நெசவாளர் அணி கா. ராஜ்முகமது தலைமை வகித்தார்.. சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எம்.சாமி கண்ணு, செ.தமிவந்தன், சரிதாமகேஷ்குமார் எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி, வானவில் விஜய், நா.துலுக்காணம், இரா.வீரமணி, எம்.பெரோஸ் கான், லயன்பி.உதயசங்கர், டி.லோகேஷ், பி.ஜெ.துளசிங்கம், பெரம்பூர் ஆர்.மகேஷ், எஸ்.தமிசெல்வி எம்.சி, எல்.ரமணி எம்.சி, மு.சரவணன் எம்.சி, எ.புனிதவதிஎத்திராசன் எம்.ச, ச.அம்பேத்வளவன் எம்.சி, எம்.தமும், எஸ்.சசிகுமார், எஸ்.வெங்கடேசன், வி.க.வெங்கடேசன், பரிமாளா சுரேஷ்பாபு, மா.ருத்ரமூர்த்தி, எம்.இசட்.அபாய், எம்.ஏ.டீக்கா, எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், த.ருணாநிதி, ப.பாபுமனோகர், டாக்டர்.வினோத்இளங்கோ, கனல்.கங்கா, ஜெ.அவினாண், எஸ்.கௌதம், எஸ்.சர்தார், சி.மகாலட்சுமி, எஸ்.தனலட்சுமி, ஸ்டீபன்டிசெல்வா, ர.தனகுமார், க.சச்சின், பி.ஆர்.வெங்கடேசன், ஸ்.துரைராஜ், அ.வில்லியம்ஸ், ஆ.ஜெயராஜ், கனகாசண்முகம், இம்ரான், புரசை.டி.சீனிவாசன், க.ராஜேந்திரன், பி.சரண்ராஜ், ப.பார்த்தசாரதி, கே.ஜனா, கே.சாகுல்அமீது, ஒய்.வசிமுல்லா, எஸ்.தனலட்சுமி, எ.சத்யா, செல்வகுமார், எச்.ஜியாவுதீன், எத்திராஜ், வி.ஜி.எஸ்.கௌதம், வே.அஜய்சீனு, வே.ஹரிஷ் முன்னிலை வகித்தனர்.

கே.கோகுல், எ.அஜித்சரவணன், என்.ராஜேஷ்குமார், இ.எஸ்.ரவிச்சந்திரன், கே.கோவிந்தராஜ், ச.பாபு, பி.நடராஜன், எஸ்.பாபு, கே.தங்கவேல்ராஜன், எஸ்.சிவசண்முகம், வி.பி.ரவிசந்திரன், டி.பாலமுருகன், பி.ஜெயபிரகாஷ், கே.சிவாபாதம், எஸ்.சோனிரமேஷ், ஆர்.சுரேந்திரன், லலிதாமுத்து, கே.பி.சரேஷ், இரா.கார்த்திக், சி.நோவிஸ், வே.ராம்குமார், சி.தர்மன், பி.தழ்வாணன், ஆர்.சரேந்தர்நாத், இ.மோகன், அ.மூவேந்தன், வி.தமிழரசி, ஆர்.அப்பு(எ) தேவேந்திரன், ஜி.ராஜ்குமார், எ.ஜாபர்பேக், அப்துல்ரசீத், பிரதீப்குமார்(எ) அப்பு, எஸ்.சசிகலா ஆகியோர் வரவேற்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில், திராவிட இயக்க போர் முரசம் திரு.நாஞ்சில் சம்பத், திராவிடர் விடுதலைக் கழக பொதுச்செயலாளர் திரு. விடுதலை ராஜேந்திரன், முனைவர் ஆதிரா முல்லை திரு.குமரி பிரபாகரன் ஆகியோர் புகழுரைத்தனர்.

மேலும், இப்புகழரங்கத்தில் பெருநகர சென்னை மேயர் ஆர்.பிரியாராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, திரு.வி.க.நகர் தெற்கு வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் அ.கோவிந்தன் பி.சுகுமார் வனஜாசண்முகம் அ.கருணாநிதி அ.சி.தில்லைகதிரவன் பெரம்பூர்.ஆர்.ராஜன் புல்லட்சி.ரமேஷ் பி.புவனவதி சினார்ஆறுமுகம் திரு.வி.க.நகர் தெற்கு வடக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் இரா.புருஷோத்தமன் அ.விஜயகுமார் நெல்லை.மா.முத்தையா அ.கதிரவன் வே.து.தாமரைச்செல்வன் எல்.சுப்பிமணி ஆகியோர் சிறப்பித்தனர்.

இப்புகழரங்கத்தில் வட்ட கழக செயலாளர் தே.சுரேஷ் குமார் (எ) பொல்லு சுரேஷ் நன்றி கூறினார்கள்.

### கி.வே.ஆனந்த் குமார் ஏற்பாட்டில்

# கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய திமுக சார்பில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா!

### மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் திறந்து வைக்கிறார்!

### டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ பங்கேற்பு

திருவள்ளூர் ஏப் 24;

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் கோடை காலம் பொதுமக்களுக்கு தாகம் தீர்க்கும் வகையில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா கழகத் தலைவர் கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கி.வே.ஆனந்த் குமார் ஏற்பாட்டில் இன்று 24.04.2025 வியாழன் கிழமை காலை 09.00 மணியளவில் கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட புதுவாயல், கவரைபேட்டை K.S.சாலை பேருந்து நிறுத்தம் அருகில் புதுகும்முடிப்பூண்டி, ஆகிய இடங்களில் நீர்மோர் பந்தலை அமைக்கப்பட்டு அதனை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் ஆகியோர் கலந்து கொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைக்கிறார்கள் இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஊராட்சி கிளைக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்



தியாகராயர் நகர் 134 (அ) வட்டத்தில், மாவட்டப் பிரதிநிதி எம்.டி.சி. அ.ஆனந்தன், ஆட்டோ சம்பத், இளைஞரணி பகுதி துணை அமைப்பாளர் ஆர்.கே.ராஜ் ஆகியோர் ஏற்பாட்டில் 3 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள பொதுமக்களின் தாகத்தை தீர்க்கும் தண்ணீர் பந்தலை தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி திறந்து வைத்தார். இதில் வட்டக் கழகச் செயலாளர் ஜி.பி.செந்தில்குமரன், பொதுக்குழு உறுப்பினர் எம்.ஆறுமுகம் மற்றும் வட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.



பெருங்களத்தூர் தெற்கு பகுதி இளைஞரணி சார்பில் கழகத் தலைவர் , தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற தண்ணீர் பந்தலை பெருங்களத்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர் எஸ்.சேகர் எம்.சி. தலைமையில், பி.புகழேந்தி மணிவண்ணன் பி.சுரேஷ் ஆர்.பரஞ்சோதி முன்னிலையில், தாம்பரம் மாநகர செயலாளர், எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். டி.காமராஜ், கோல்டு டி.பிரகாஷ் , பி.கே.ஏ.சத்தியபிரபு, சா.ராஜேஷ், வி.கார்த்தி, வே.சிவசுப்பிரமணியம், ஏ.குமரன் சுரேஷ் ஆர்.தேவராஜ் கே.எஸ். விக்கி யுவராஜ் தா.மணிகண்டன், அருண்குமார், டி.கே.கோட்டி, கே.சுந்தர் எஸ். சிவக்குமார் ஆர். லயன் ரேமான், எஸ்.எம்.சோமசுந்தரம், அருண்குமார், ராகுல், அன்சாரி, சுபாஷ், ஆனந்தன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ஏ.ஓம்பிரகாஷ் , ஏ.குமரன் நன்றி கூறினர்.

### திரு.வி.க. நகர் தொகுதி - 71வது வார்டில்

# நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திடுவீர்!

### சட்டப்பேரவையில் - ப.தாயகம் கவி கோரிக்கை!

சென்னை, ஏப்.24-

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நேற்று (23.04.2025) காலை நடைபெற்ற வினாக்கள்- விடை நேரத்தின் பொழுது திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதியின் கழக உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி எழுப்பிய கேள்வியும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அளித்த பதிலும் பின்வருமாறு :-

**ப.தாயகம் கவி:** திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி, வார்டு எண் 71-ல், நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை அமைத்துத் தர அரசு முன்வருமா?

**மா.சுப்பிரமணியன்:** நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 708 நகர்ப்புர நல வாழ்வு மையங்கள் அமைக்கப்படும் என்று விதி 110-ன்கீழ் அறிவித்து, 500 மருத்துவமனைகளைத் திறந்து வைத்திருக்கிறார்கள். மேலும், 208 மருத்துவமனைகள் முழுமைபெற்று திறக்கும் தருவாயில் இருக்கின்றன.



சென்னையைப் பொறுத்தவரை, 200 வார்டுகளிலும், வார்டுக்கு ஒன்றுவீதம் இன்றைக்கு மருத்துவமனைகள் திறந்து வைக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கெனவே, 140 இடங்களில் திறந்து வைக்கப்பட்டன. மீதமுள்ள 60 இடங்களிலும் மருத்துவமனைகள் கட்டும் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன.

உறுப்பினர் தாயகம் கவி சொன்ன வார்டில், இந்த மருத்துவமனை அமையாமல் இருந்தால், அவர் உரிய இடத்தை காட்டினால், நாளையே அந்த மருத்துவமனை அங்கு அமைவதற்கான பணிகள் தொடங்கி வைக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### 'நான் முதல்வன்' திட்டம் மூலம் யு.பி.எஸ்.சி. தேர்வுகளில் தமிழ்நாடு மாணவர்கள் சாதனை!

# ஒட்டுமொத்த தமிழ்நாடும் பெரும் மகிழ்ச்சியில் திளைக்கிறது!

### சட்டப்பேரவையில் - ஐ.பி.செந்தில்குமார் பெருமிதம்!

சென்னை, ஏப்.24-

சட்டப்பேரவையில், நேற்று, "பழனி நகராட்சி குடிநீர்த் திட்டப்பணிகள்" தொடர்பாக தாம் கொண்டுவந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் மீதான விவாதத்தில் பேசிய பழனி தொகுதி கழக உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார் "நமது முதல்வர் அவர்களின் மகத்தான திட்டங்களில் ஒன்றான 'நான் முதல்வன்' திட்டம் மூலம், யு.பி.எஸ்.சி. தேர்வுகளில் தமிழ்நாட்டு மாணவர்கள் பெற்றுள்ள பெரு வெற்றியால், ஒட்டுமொத்த தமிழ்நாடும் மகிழ்ச்சியில் திளைக்கிறது" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில், பழனி தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார், பழனி நகராட்சி குடிநீர்த் திட்டப் பணிகள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசினார்.

விவர அறிக்கைக் குறித்து பேசுவதற்கு முன்பு ஒரு செய்தியை இந்த அவையின் முன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

நேற்று வெளியான UPSC தேர்வு முடிவுகளில், நம்முடைய திராவிட மாடல் நாயகர், மக்கள் தலைவர்



அண்ணன் தளபதியார் அவர்களுடைய மகத்தான திட்டங்களில் ஒன்றான நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக 134 பேர் பயிற்சி பெற்றதில், அதில் 50 பேர் தேர்ச்சி பெற்றிருப்பதாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே தேசிய அளவில் 23 ஆவது இடத்தை தமிழ்நாடு பிடித்திருக்கிறது. தமிழ் வழியில் படித்த காமராஜ், அதேபோல சங்கரபாண்டியன்ராஜ் மதுரையைச் சேர்ந்தவர்.

இன்றைக்கு அதில் வெற்றி பெற்றிருக்கக்கூடிய செய்தியைப் பார்த்தபொழுது, ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் பெரும் மகிழ்ச்சியில் திளைத்து நிற்கக்கூடிய சூழலில், (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய மகிழ்ச்சியையும் இந்த அவையோடு இணைந்து பதிவு செய்ய விரும்புகின்றேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



சென்னை வடக்கு மாவட்டம் ராயபுரம் கிழக்கு பகுதி இளைஞரணி சார்பில் கோடை வெப்பத்திலிருந்து பொதுமக்கள் தாகம் தணிக்கும் வகையில் ராயபுரம் கிழக்கு கல்மண்டபம் சாலையில் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் நி. சுனில் குமார் ஏற்பாட்டில் நீர்மோர் பந்தலை மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர் திறந்து வைத்து பொதுமக்களுக்கு இளநீர், மோர், தர்பூசணி, வெள்ளரிக்காய், ரோஸ் மில்க் உள்ளிட்ட குளிர்பானங்களை வழங்கினார். இதில் ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், கிழக்குப் பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், 50வது அ வட்ட செயலாளர் என்.கிருஷ்ணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் லயோலா கே.மதன், கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மாநகராட்சி ரிப்பன் கட்டடத்தில்

# சட்டப்பேரவை உறுதிமொழி ஆய்வுக் கூட்டம்!

### நாளை நடைபெறுகிறது!

சென்னை, ஏப்.24-

பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் நாளை 25 ஆம் தேதி, சட்டப்பேரவை உறுதிமொழி ஆய்வுக் கூட்டம் நடைபெறுகிறது.

இதுகுறித்து வெளியான செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2024-2026ஆம் ஆண்டிற்கான 12 உறுப்பினர்கள் கொண்ட அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் தி. வேல்முருகன் தலைமையில், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, முன்னிலையில் 25.04.2025 வெள்ளிக்கிழமையன்று பிற்பகல் 3 மணியளவில் சென்னை மாவட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அரசு உறுதிமொழிக் குழு ஆய்வுக்கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள அம்மா மாளிகை கூட்டரங்கில் நடைபெறவுள்ளது.



கும்முடிப்பூண்டி தொகுதி, கும்முடிப்பூண்டி ஒருங்கிணைந்த பள்ளிகல்வி மாணவர்கள் சேர்க்கை விழிப்புணர்வு பேரணியை கும்முடிப்பபூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் துவக்கி வைத்து பொது மக்களிடம் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார். உடன் மு.மணிபாலன், எஸ்.ரமேஷ், இரா.அறிவழகன், மு.பாஸ்கரன், மு.கேசவன், எஸ்.ராமஜெயம், கே.ஆறுமுகம், இரா.ரமேஷ், அப்துல்கரீம், எஸ்.எம்.திருநாவுக்கரசு, மு.வேதசாலம், க.பரத்குமார், எம்.ஜெயசந்திரன், எஸ்.உதயகுமார், பா.பரத்குமார், ரவிந்திரன், கே.ஜி.நமச்சிவாயம், ப.சுரேஷ், மெய்யழகன், தமிழ்சாதிக், ரவிசந்திரன், குப்பன், ரவி, செந்தில், சாண்டிலியன் காமாட்சி, ஆனந்தன், அறிவழகன், நரேந்திரன், கே.வி.நாகராஜ், கே.வி.ரவி, போண்டா சிவா, வனசந்திரன், சகாதேவன், மோகன், இளவரசன், இஜாஸ், முகிலன், பி.இ.ஒ.சுதா, முனிசேகர், சிவகாமி, திலகவதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.